சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : **திரு.R.விஜயன்.,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.நி.ம.எண்.03/2024**

**இன்**

**அசல் வழக்கு எண்.95/2024**

சேகர் .... மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. சிவாஜி
2. தங்கராஜ்
3. குமார்
4. கோவிந்தன்
5. சந்திரன்
6. குமுதா
7. ஜப்பான்
8. தவமணி
9. சரோஜா
10. ஊராட்சி மன்ற தலைவர், எல்லப்புடையாம்பட்டி
11. சார்பதிவாளர் அவர்கள், அரூர்
12. வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள், அரூர்
13. மாவட்ட ஆட்சியர் அவர்கள், தருமபுரி

... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 01.08.2025 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சித்தார்தன்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல்9 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஈ.தவமணி,எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 10 ம் எதிர்மனுதாரர்/10 ம் பிரதிவாதி தரப்பில் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 11 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/11 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.09.02 17:33:22 +0530

அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

1. தாவாவில் முழுமையான விசாரணை முடிந்து தீர்ப்பாணை பிறப்பிக்கும்வரை பிரதிவாதிகளோ, அவருடைய ஆட்களோ மனுதாரர/வாதி மனு சொத்தை அனுபவம் செய்வதில் எந்தவித இடையூறும் செய்யாதபடிக்கு ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1, 2 ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்: -**

(i) தான் மேற்படி மனுவில் மனுதாரர், வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகைக்காகவும், நிரந்தர உறுத்துக்கட்டளை வேண்டியும் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றும்,

(ii) மனு சொத்தானது கடந்த 27.08.2024 ஆம் தேதியில் அரூர் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண் எண்.6250/2024 இன் படி தனக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், அதன்படி அன்று முதல் இன்று வரை தான் மனு சொத்தில் பருவப்பயிகள் செய்துக்கொண்டு தன்னுடைய தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில் வைத்துள்ளேன் என்றும், மனு சொத்தில் தனக்கு மட்டுமே தனிப்பட்ட பாத்தியம், அதை மறுத்துபேச யாருக்கும் எந்த உரிமையும் கிடையாது என்றும், மேற்படி 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தன்னுடைய பக்கத்து நிலத்துகாரர்கள் என்றும், 10 ஆம் எதிர்மனுதாரர் எல்லப்புடையாம்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் என்றும், 11,12,13 ஆம் எதிர்மனுதாரர்கள் அரசுதரப்பினர்கள் என்றும்,



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.09.02 17:33:26 +0530

(iii) மனு சொத்தை தான் கடந்த 27.08.2024 ஆம் தேதியில் கிரைய ஆவண எண்.6250/2024 ஆக அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் படி ஒரு முருகன் என்பவரிடமிருந்து விலைக்கு பெற்ற சொத்தாகும் என்றும், மேற்படி மனு சொத்தை தான் கிரையம் பெற்றதிலிருந்து இன்று வரை தன்னுடைய தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில் இருந்துவருகிறது என்றும், மேலும் மனு சொத்தின் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் தன்னுடைய பெயரிலேயே உள்ளது என்றும், மனு சொத்தானது தனக்கு தவிர 1 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கோ, மற்ற நபர்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றும், மேற்படி மனு சொத்தை தான் அனுபவம் செய்துவருவதில் பொறாமை கொண்ட 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தை தங்களுக்கு விற்பனை செய்துவிட்டு சுவாதீனத்தை விட்டு வெளியேறுமாறும் இல்லை என்றால் 12 ஆம் எதிர்மனுதாரரின் பெயரில் 11 ஆம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் ஆவணம் செய்து, 1 முதல் 9 எதிர்மனுதாரர்களுடைய நிலங்களுக்கு செல்ல 10 எதிர்மனுதாரரின் உதவியுடன் என்னுடைய நிலத்தில் தார்சாலை அமைக்கபோவதாகவும் தன்னை தொடர்ந்து அச்சுறுத்தி வந்தார்கள் என்றும்,

(iv) மேற்படி 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தாவா கிராமத்தில் மிகவும் செல்வாக்குமிக்கவர்கள், 10 ஆம் எதிர்மனுதாரரான எல்லபுடையாம்பட்டி ஊராட்சி மன்ற தலைவரின் நெருங்கிய உறவுக்காரர்கள் என்றும், மேலும் ஊரில் உள்ளவர்களின் நிலங்களை குறைத்தவிலைக்கு மிரட்டிபரிக்கும் செயலில் ஈடுபட்டு வருபவர்கள் என்றும், அந்தவகையில் தன்னை மிரட்டி மனு சொத்தை எப்படியாவது அடைந்துவிட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனு ஆம் சொத்தை தன்னிடமிருந்து 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் 10ம் எதிர்மனுதாரரின் உதவியுடன், அவர்களுடைய அதிகார பலத்தையும், பணபலத்தையும் பயன்படுத்தி 11 ஆம் எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் 12



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.09.02 17:33:30 +0530

ஆம் எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்துவிட்டதுபோன்ற மோசடி ஆவணங்களை தயார்செய்துக்கொண்டு, அதைகாட்டி தன்னை மனு சொத்தின் சுவாதீனத்திலிருந்து வெளியேற்றி மனு சொத்தில் தார் சாலை அமைக்கப்போவதாக மிரட்டி, மனு சொத்தை அக்கிரமமான முறையில் சுவாதீனம் அடையவேண்டி, கடந்த 29.08.2024 ஆம் தேதி 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் 10 ஆம் எதிர்மனுதாரரின் உதவியுடன் தங்களுடைய அடியாட்களுடன் வந்து மனு சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்து மனு சொத்தில் ஜல்லி, கிரேவல் மண் ஆகியவற்றை கொட்டி ஜேசிபி இயந்திரம் மூலம் நிரவல் செய்து தார் சாலை அமைக்க முன்னேற்பாடுகள் செய்தார்கள் என்றும், மேலும் 1 முதல் 10 எதிர்மனுதாரர்களின் அக்கிரம செயலை தான் அக்கம் பக்கத்தினர் மற்றும் உறவினர்கள் உதவியுடன் தடுத்துள்ளார் என்றும், மேலும் தான் கடந்த 30.08.2024 ஆம் தேதி 12 ஆம் எதிர்மனுதாரரை நேரில் சந்தித்து தனக்கு சொந்தமான மனு சொத்தில் எவ்வித அறிவிப்பும் கொடுக்காமல் தார் சாலை அமைப்பதை தடுக்க மனு கொடுத்தேன் என்றும், மேலும் தான் உறவினர்கள் மூலம் சாலை அமைப்பதை தடுத்தும், 12 ஆம் எதிர்மனுதாரரிடம் மனு கொடுத்தும், எவ்வித விசாரனையும் இல்லாமல் மீண்டும் தார் சாலை அமைப்பதற்கான வேலைகள் நடந்துவருகிறது என்றும், இந்நிலையில் கடந்த 01.09.2024 ஆம் தேதி காலை சுமார் 9.30 மணியளவில் நான் எனது உறவினர்களுடன் 1 விவசாய வேலைகள் எதிர்மனுதாரர்கள் 10 ஆம் செய்துகொண்டிருந்தபோது முதல் 9 எதிர்மனுதாரரின் உதவியுடன் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து தன்னையும் தனது உறவினர்களையும் அசிங்கமான கெட்ட வார்த்தைகளால் திட்டி, கையில் வைத்திருந்த கட்டை, இரும்பு ராடு, ஆகியவற்றால் சரமாரியாக தாக்கி தன்னுடைய தாவா சொத்தில் கட்டாயம் தார் சாலை அமைத்தே தீருவோம் என்றும் மிரட்டினர்கள் என்றும், மேற்படி முதல் 9 எதிர்மனுதாரர்களின் சட்டபுறம்பான செயளால் தனக்கும் தனது



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:33:35 +0530

உறவினர்களுக்கும் பலத்த இரத்தகாயம் ஏற்பட்டது என்றும், மேற்படி சம்பவம் தொடர்பாக நான் அரூர் காவல்நிலையத்தில் புகார் மனு அளித்ததில் குற்ற எண்.422/2024 ஆக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் மனு சொத்தில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் 10, 12 ஆம் எதிர்மனுதாரர்களின் உதவியுடன் மீண்டும் அதிக ஆட்களுடன் வந்து மனு சொத்தை ஆக்கிரமிப்பு செய்யாமல் விடுவதில்லை என்றும், ஆக்கிரமிப்பு செய்து எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் 12 ஆம் எதிர்மனுதாரரின் பெயருக்கு ஆவணம் ஏற்படுத்த போவதாகவும், மனு சொத்தில் தார்சாலை அமைக்க போவதாகவும் மிரட்டினார்கள் என்றும், 1 முதல் 10 மற்றும் 12 ஆம் எதிர்மனுதாரர்கள் தனக்கு மட்டுமே பாத்தியப்பட்ட மனு சொத்தை மோசடியாக அடைய 11 ஆம் முயற்சி செய்துவருகிறார்கள் என்றும், 1 முதல் 10 மற்றும் 12 ஆம் எதிர்மனுதாரர்களின் இத்தகைய செயல் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானது, சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும்,

(v) மேற்படி 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் பணபலமும் படைபலமும் மிக்கவர்கள் என்றும், 10,12 ஆம் எதிர்மனுதாரர்களின் உதவியுடன் தாங்கள் நினைத்ததை எந்தநேரத்திலும் எந்தவகையிலும் செய்யத்துணிந்தவர்கள் என்றும், எதிர்மனுதாரர்களின் அக்கிரம செயலை மாண்புமிகு நீதிமன்றத்தின் தடை உத்தரவால் மட்டுமே தடைசெய்ய இயலும் என்ற காரணத்தால் தன்னுடைய நிம்மதியான சுவாதீன அனுபவத்திற்கு 1 முதல் 10 எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ எவ்வித இடையூறுகளும் செய்யாதபடிக்கும் 12ம் எதிர்மனுதாரரின் பெயரில் 11ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் ஆவணங்கள் செய்யாதபடிக்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை வேண்டியும், விளம்புகைக்காகவும் இந்த தாவாவை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், இந்த நிலையில் தாவா தீர்பாகும் வரையில் எதிர்மனுதாரர்களின் அக்கிரம செயலை தடைசெய்யவேண்டியுள்ளதால் இடைக்கால உத்தரவு வழங்கவேண்டியது



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:33:39 +0530

அவசியமும், நியாயமுமாய் உள்ளது என்றும், எனவே தாவாவில் முழுமையான விசாரணை முடிந்து தீர்ப்பாணை பிறப்பிக்கும்வரை பிரதிவாதிகளோ, அவருடைய ஆட்களே தான் மனு சொத்தை அனுபவம் செய்வதில் எந்தவித இடையூறும் செய்யாதபடிக்கு ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு வழங்க வேண்டும் என்றும் மனுதாரர்/வாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

3. **3 எதிர்மனுதாரர்/3 பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 1,2 மற்றும் 4 முதல் 9 ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்: -**

(i) மனுதாரரின் மனு பொய், மோசம், சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, தள்ளுண்டுபோகத்தக்கது. இந்த எதிர் உரையில் இந்த எதிர்மனுதாரர் நேரடியாக ஏற்றுக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே கண்டிப்பாக நிருபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனு அபிடவிட் பாரா 1-ல் கண்ட சங்கதிகள் அனைத்தும் உண்மை. மனு அபிடவிட் பாரா 2 ல் கண்ட சங்கதிகள் அனைத்தும் பொய் சங்கதிகளாகும்.

(ii) மனு அபிடவிட் பாரா 3-ல் கண்ட சங்கதியில் மேற்படி 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் பக்கத்து நிலத்துக்காரர்கள் என்பதும், 10-ஆம் எதிர்மனுதாரர் எல்லப்புடையாம்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் என்பதும், 11,12,13 ஆம் எதிர்மனுதாரர்கள் அரசுதரப்பினர்கள் என்பதும் உண்மை. மற்ற அனைத்து சங்கதிகளும் மனுவிற்காக மனுதாரரால் கற்பனை செய்து ஜோடிக்கப்பட்ட பொய் சங்கதிகளாகும்.

(iii) மனு அபிடவிட் பாரா 6-ல் கண்ட சங்கதியில், மனுதாரர் அரூர் காவல் நிலையத்தில் பொய் புகார் மனு அளித்ததில் குற்ற எண்.422/2024 ஆக பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தான் உண்மை. மற்ற சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக மனுதாரரால் ஜோடிக்கப்பட்ட பொய் சங்கதிகளாகும். முதல் நோக்கு



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:33:44 +0530

வழக்கும், நிறைகோழின் வாய்ப்பு நலனும் எதிர்மனுதாரர்கள் புறம் தான் உள்ளது. அவை மனுதாரர் புறம் இல்லை.

(iv) மனுதாரர் உண்மை சங்கதிகளுடனும், தூயகரங்களுடனும் கனம் நீதிமன்றத்தை நாடி வழக்கையும், மனுவையும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் மனுவில் கோரியுள்ள எப்பரிகாரத்தையும் அடைய அருகர் அல்லர்.

(v) உண்மையில், கௌாப்பாறை - ஈட்டியம்பட்டி செல்லும் பிரதான தார்சாலையில் இருந்து கிழக்கு நோக்கி குரங்கனேரி வனச்சரகம் வரை புறம்போக்கு நிலங்கள் வழியாகவும், தாவா சொத்தின் வழியாகவும் காலம் காலமாக தொன்று தொட்டு தென்வடல் சுமார் 16 அடி அகலத்தில் சென்றுவரும் பாதையாகும். மேற்படி பாதையின் வடபுறமும், தென்புறமும், சுமார் 100 குடும்பத்தார்கள் தங்களுடைய விவசாய நிலங்களுக்கும், குடியிருப்பு வீடுகளுக்கும் வண்டி, வாகனங்கள், கால்நடைகள், ஆட்கள், கனரக வாகனங்கள் போகவர பயன்படுத்தி வரும் வண்டிப்பாதையாகும். மேற்படி பாதை வழியாக கௌாப்பாறை கிராம ஊர்பொதுமக்கள் குரங்கனேரி வனச்சரத்திற்கு கால்நடைகளை கொண்டு செல்லவும், கொண்டுவரவும், வனச்சரம் அருகில் கட்டப்பட்டுள்ள முனீஸ்வரன் ஆலையத்திற்கு ஊர்பொதுமக்கள் விழா காலங்களில் சென்று வழிபட்டு வரவும் தாவா சொத்தின் வழியாகவும், புறம்போக்கு நிலத்தின் வழியாகவும் சென்றுவரும் பாதையை தவிர வேறு பாதை ஏதும் கிடையாது.

(vi) தாவா சொத்தின் வழியாகவும், புறம்போக்கு நிலங்கள் வழியாகவும் கிழமேலாக தென்வடல் 16 அடி அகலத்தில் செல்லும் பாதையை கௌாப்பாறை ஊராட்சிமன்றத்தின் உனவுக்கு வேலை திட்டத்தின் கீழ் 2004-2005-ம் ஆண்டில் மண்சாலையாக தரம் உயர்த்தப்பட்டது. அதன் பின்னிட்டு 2019-2020-ம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் பணி உத்தரவு நாள் 15-09-2020-ன்படிரூ.14,19,350/- மதிப்பீட்டில்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:33:48 +0530

ஜல்லி சாலையாக மேலும் தரம் உயர்த்தப்பட்டது. அதற்கான ஆவணத்தை எதிர்மனுதாரர்கள் தங்களது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். மேற்படி பணிகள் செய்தபோது வாதியின் முன் பாத்தியஸ்தர் முருகன் எவ்வித இடையூறும் செய்யவில்லை.

(v) முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2024-2025-ம் ஆண்டு D.O.Lr.No.1650/2024/R2 நாள் 10-08-2024-தேதிய தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு படி மேற்படி பாதை மீண்டும் தார்சாலையாக ரூ.50,66,527.99 மதிப்பீட்டில் தரம் உயர்த்த ஆணை வழங்கப்பட்டு மேற்படி ஜல்லி சாலையை தார்சாலையாக மாற்ற 14-08-2024-ந் தேதி வேலை தொடங்கி பணி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது வாதியின் முன் பாத்தியஸ்தர் முருகன் த/பெ. லட்சுமணன் என்பவர் எவ்வித இடையூறும் எப்போதும் செய்யவில்லை. முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2024-2025-ம் ஆண்டு D.O.Lr.No. 1650/2024/R2 நாள் 10-08-2024-தேதிய தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவிற்கு பின்னிட்டு தாவா சொத்தின் வழியாக பொதுமக்கள் சென்றுவருவதையும், சுமார் 100 குடும்பத்தார் விவசாய நிலங்களுக்கும், குடியிருப்பு வீடுகளுக்கும் காலம் காலமாக சென்றுவருவம் வண்டிப்பாதையை மறைத்து சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பான வகையில் வாதி 27-08-2024-ந் தேதி கிரையம் பெற்றுக்கொண்டு 10-ஆம் எதிர்மனுதாரர் தார்சாலை அமைக்க ஜல்லி கொட்டி நிரவல் செய்யப்பட்ட பிறகு மனுதாரர்/வாதி பொதுமக்களுக்கும், 100 விவசாய குடும்பத்தாருக்கும் வீண் இடையூறும், இடைஞ்சலும், தடைகளும் ஏற்படுத்தும் நோக்கில் 01-09-2024-ந் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் உள்ளூர் மற்றும் வெளியூர் சேர்ந்த அடியாட்கள் 50 பேர் கொண்ட கும்பல் ஆயுதங்களுடனும், (பைப்ராடு, மீன்வெட்டும் கத்தி,) மற்றும் தடி, தொன்னை ஆகியவைகளுடன் வந்து டிராக்டர் மூலம் மேற்படி வண்டிப்பாதையை அழித்து நாசம்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:33:53 +0530

செய்யவும், தார்சாலை அமைக்க நிரவப்பட்டிருந்த ஜல்லிகளை சேதப்படுத்தவும் முற்பட்டார்கள்.

(vi) கௌாப்பாறையை சேர்ந்த ராமன் த/பெ. பொன்னுசாமி என்பவர் 01-09-2024-ந் தேதி அதிகாலை இறந்த சங்கதி தெரிந்து 1 முதல் 9 எதிர்மனுதாரர்களும், ஊர்பொதுமக்களும் இறப்பிற்கு செல்வதற்காக மேற்படி பாதை வழியாக வந்துக்கொண்டிருந்தபோது மனுதாரர்/வாதி மேற்படி பாதை வழியாக யாரும் வரக்கூடாது என்றும், மேற்படி பாதை அவருக்கு சொந்தமானது என கூறி அடியாட்களுடன் சேர்ந்து 1 முதல் 9 எதிர்மனுதாரர்களையும், மற்றும் பெண்களையும் தகாத வார்த்தைகளால் திட்டி தாக்கியதில் 2-ம் எதிர்மனுதாரர் தங்கராஜ் என்பவரின் மண்டையை உடைத்தும், வலதுபுற சோல்டரை உடைத்தும், வலது கை பெருவிரலை உடைத்து விட்டார்கள். அதேபோல் ஏழுமலையை தாக்கியதில் அவரின் தலையில் பலத்த ரத்தகாயமும், 1-ம் பிரதிவாதி சிவாஜிக்கு தலையில் பலத்த ரத்தகாயமும், 6-ம் பிரதிவாதி குமுதாவிற்கு தலை மற்றும் உடம்பு பகுதியில் பலத்த ரத்த காயமும், 7-ம் பிரதிவாதி ஜப்பானின் முதுகின் பின்புறம் தடியால் தாக்கியதில் பலத்த உட்காயமும், வெளிகாயமும் ஏற்பட்டுவிட்டது. 5-ம் பிரதிவாதி சந்திரன் என்பவருக்கு தலையின் வலது அடித்ததில் வீக்க காயம் ஏற்பட்டுவிட்டது. 3-ம் பிரதிவாதி குமாருக்கு வலது கை மணிக்கட்டின் மீது தடியால் அடித்ததில் உட்காயம் ஏற்பட்டுவிட்டது.

(vii) தாவா சொத்தின் வழியாகவும், அரசு புறம்போக்கு நிலங்கள் வழியாகவும் வண்டிப்பாதை கௌாப்பாறை - ஈட்டியம்பட்டி செல்லும் தார்சாலையில் இருந்து கிழக்கு நோக்கி குரங்கனேரி வனச்சரகம் வரை பஞ்சாயத்து வண்டிப்பாதை சென்றுவருவதை 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் புகைப்படம் எடுத்து தாக்கல் செய்துள்ளார்கள். சி.டி, பெண்டிரைவ் ஆகியவைகளை நீதிமன்ற விசாரணையின் போது ஒப்படைக்க தயாராக



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:33:56 +0530

உள்ளார்கள். எனவே மனுதாரர் மனுவை இந்த 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தனது பதிலுரையில் கூறியுள்ளார்.

4. **<u>11 எதிர்மனுதாரர்/11 பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, 13ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த எதிர்வழக்குரையை இம்மனுவில் பதிலுரையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்ட பதிலுரையின் சுருக்கம்</u>**: -

(i) மனுதாரரின் மனு பொய் மோசம், சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டியது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிருரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத்தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

(ii) மனு பாரா 2ல் கண்ட சங்கதிகள் சரியல்ல. மனு சொத்து 27.08.2024 தேதியிட்ட கிரைய பத்திரப்படி பாத்தயப்பட்டது என்பதும் அதன்படி மனுதாரர் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்பதும் தவறாகும். மனு பாரா 4 முதல் 6ல் கண்ட சங்கதிகள் சரியல்ல. மனுதாரர் இந்த எதிர்மனுதாரரை நேரில் சந்தித்து அவருக்கு சொந்தமான சொத்தில் எவ்வித அறிவிப்பும் கொடுக்காமல் தார்சாலை அமைப்பதை தடுக்க மனு கொடுத்துள்ளார் என்பதும் எவ்வித விசாரணையும் இல்லாமல் தார்சாலை அமைப்பதற்கான வேலைகள் நடந்துவருகிறது என்பதும் தவறாகும்.

(iii) தாவா சொத்து விவரம் தவறு. தாவாவிற்கு வியாஜ்ஜியமூலமே இல்லை. தாவாவில் கூறப்பட்ட வியாஜ்ஜியமூலமும் தவறாகும். மனு சொத்துக்கள் பொறுத்து கனம் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுபடி இந்த எதிர்மனுதாரர் செயல்பட தயாராக உள்ளார். எனவே இந்த எதிர்மனுதாரரின் எதிருரையை ஏற்றுக்கொண்டு மனுதாரரின் மனுவை



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:34:00 +0530

இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 11ம் எதிர்மனுதாரர்/11 ம் பிரதிவாதி தனது எதிருரையில் கூறியுள்ளார்.

5. **<u>12 எதிர்மனுதாரர்/12 பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையாக தாக்கல் செய்யப்பட்டு பதிலுரையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்: -</u>**

(i) மனுதாரரின் மனு பொய் மோசம், சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டியது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிருரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத்தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

(ii) அரூர் ஊராட்சி ஒன்றியம், எல்லப்புடையாம்பட்டி ஊராட்சி, கௌாப்பாறை கிராமத்தில் 2024-2025 ஆம் ஆண்டு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (MGSMT) கீழ் சாலை பணிகள் தொடங்கப்பட்டதாகவும், அதை எதிர்த்து மனுதாரர் மனு கொடுத்ததாகவும் அதனை உரிய முறையில் விசாரணை செய்து மேற்படி சாலை பணிகளை நிறுத்திவிட்டதாகவும் இந்த எதிர்மனுதாரர் தெரிவிக்கின்றார்.

(iii) மேற்படி சாலை பணிகள் சுமார் 6 மாத காலமாக முடிக்கப்படாததால் 04.03.2025-ம் தேதியில் ந.க.எண்.1358/2024/அ 2-ன் படி கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதன்பிறகு 24.03.2025-ம் தேதியில் ந.க.எண்.1650/2024/ஆர்2 -ன் படி 13-ம் பிரதிவாதி மாற்றுப்பணிக்கான நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளதாகவும் இந்த எதிர்மனுதாரர் தெரிவிக்கின்றார்.

(iv) மேற்படி மாற்றுப்பணியை அனுசரித்து 24.04.2025-ம் தேதியில் Roc.No. 1650/2024/R2 ன் படி பணி உத்தரவும் வழங்கப்பட்டு அரூர் ஊராட்சி ஒன்றியம், கொங்கவேம்பு ஊராட்சி, எஸ்.டி.சாலை முதல் கருத்தம்பட்டி வரை தார்சாலை மேம்பாடு



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.09.02 17:34:04 +0530

செய்து பணி நிறைவு செய்யப்பட்டுவிட்டதாகவும் இந்த எதிர்மனுதாரர் தெரிவிக்கின்றார். மேற்படி சங்கதிகள் அனைத்தையும் மறைத்து மனுதாரர் பொய்யான சங்கதிகளுடன் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து விவரம் தவறு. தாவாவிற்கு வியாஜ்ஜியமூலமே இல்லை. தாவாவில் கூறப்பட்ட வியாஜ்ஜியமூலமும் தவறாகும். எனவே இந்த எதிர்மனுதாரரின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 12 ம் எதிர்மனுதாரர்/12 ம் பிரதிவாதி தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**6.** 10 ம் எதிர்மனுதாரர்/10 ம் பிரதிவாதி தரப்பில் தோன்றாதரப்பினராக பாவிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

**7. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u> : -**

**8.** தாவாவில் முழுமையான விசாரணை முடிந்து தீர்ப்பாணை பிறப்பிக்கும்வரை பிரதிவாதிகளோ, அவருடைய ஆட்களோ மனுதாரர/வாதி மனு சொத்தை அனுபவம் செய்வதில் எந்தவித இடையூறும் செய்யாதபடிக்கு ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1, 2 ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9.** மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் பதிலுரையில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், மனு சொத்தானது கடந்த 27.08.2024 ஆம் தேதியில் அரூர் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண் எண்.6250/2024 இன் படி தனக்கு



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.09.02 17:34:08 +0530

பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், அதன்படி அன்று முதல் இன்று வரை தான் மனு சொத்தில் பருவப்பயிகள் செய்துக்கொண்டு தன்னுடைய தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில் வைத்துள்ளேன் என்றும், மனு சொத்தில் தனக்கு மட்டுமே தனிப்பட்ட பாத்தியம், அதை மறுத்துபேச யாருக்கும் எந்த உரிமையும் கிடையாது என்றும், மேற்படி 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தன்னுடைய பக்கத்து நிலத்துகாரர்கள் என்றும், 10 ஆம் எதிர்மனுதாரர் எல்லப்புடையாம்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் என்றும், 11,12,13 ஆம் எதிர்மனுதாரர்கள் அரசுதரப்பினர்கள் என்றும், மனு சொத்தை தான் கடந்த 27.08.2024 ஆம் தேதியில் கிரைய ஆவண எண்.6250/2024 ஆக அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் படி ஒரு முருகன் என்பவரிடமிருந்து விலைக்கு பெற்ற சொத்தாகும் என்றும், மேற்படி மனு சொத்தை தான் கிரையம் பெற்றதிலிருந்து இன்று வரை தன்னுடைய தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில் இருந்துவருகிறது என்றும், மேலும் மனு சொத்தின் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் தன்னுடைய பெயரிலேயே உள்ளது என்றும், மனு சொத்தானது தனக்கு தவிர 1 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கோ, மற்ற நபர்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றும், மேற்படி மனு சொத்தை தான் அனுபவம் செய்துவருவதில் பொறாமை கொண்ட 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தை தங்களுக்கு விற்பனை செய்துவிட்டு சுவாதீனத்தை விட்டு வெளியேறுமாறும் இல்லை என்றால் 12 ஆம் எதிர்மனுதாரரின் பெயரில் 11 ஆம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் ஆவணம் செய்து, 1 முதல் 9 எதிர்மனுதாரர்களுடைய நிலங்களுக்கு செல்ல 10 எதிர்மனுதாரரின் உதவியுடன் என்னுடைய நிலத்தில் தார்சாலை அமைக்கபோவதாகவும் தன்னை தொடர்ந்து அச்சுறுத்தி வந்தார்கள் என்றும்,

**10.** மேற்படி 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தாவா கிராமத்தில் மிகவும் செல்வாக்குமிக்கவர்கள், 10 ஆம் எதிர்மனுதாரரான எல்லபுடையாம்பட்டி ஊராட்சி மன்ற



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.09.02 17:34:12 +0530

தலைவரின் நெருங்கிய உறவுக்காரர்கள் என்றும், மேலும் ஊரில் உள்ளவர்களின் நிலங்களை குறைத்தவிலைக்கு மிரட்டிபரிக்கும் செயலில் ஈடுபட்டு வருபவர்கள் என்றும், அந்தவகையில் தன்னை மிரட்டி மனு சொத்தை எப்படியாவது அடைந்துவிட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனு ஆம் சொத்தை தன்னிடமிருந்து 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் 10ம் எதிர்மனுதாரரின் உதவியுடன், அவர்களுடைய அதிகார பலத்தையும், பணபலத்தையும் பயன்படுத்தி 11 ஆம் எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் 12 ஆம் எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்துவிட்டதுபோன்ற மோசடி ஆவணங்களை தயார்செய்துக்கொண்டு, அதைகாட்டி தன்னை மனு சொத்தின் சுவாதீனத்திலிருந்து வெளியேற்றி மனு சொத்தில் தார் சாலை அமைக்கப்போவதாக மிரட்டி, மனு சொத்தை அக்கிரமமான முறையில் சுவாதீனம் அடையவேண்டி, கடந்த 29.08.2024 ஆம் தேதி 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் 10 ஆம் எதிர்மனுதாரரின் உதவியுடன் தங்களுடைய அடியாட்களுடன் வந்து மனு சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்து மனு சொத்தில் ஜல்லி, கிரேவல் மண் ஆகியவற்றை கொட்டி ஜேசிபி இயந்திரம் மூலம் நிரவல் செய்து தார் சாலை அமைக்க முன்னேற்பாடுகள் செய்தார்கள் என்றும், மேலும் 1 முதல் 10 எதிர்மனுதாரர்களின் அக்கிரம செயலை தான் அக்கம் பக்கத்தினர் மற்றும் உறவினர்கள் உதவியுடன் தடுத்துள்ளார் என்றும், மேலும் தான் கடந்த 30.08.2024 ஆம் தேதி 12 ஆம் எதிர்மனுதாரரை நேரில் சந்தித்து தனக்கு சொந்தமான மனு சொத்தில் எவ்வித அறிவிப்பும் கொடுக்காமல் தார் சாலை அமைப்பதை தடுக்க மனு கொடுத்தேன் என்றும், மேலும் தான் உறவினர்கள் மூலம் சாலை அமைப்பதை தடுத்தும், 12 ஆம் எதிர்மனுதாரரிடம் மனு கொடுத்தும், எவ்வித விசாரனையும் இல்லாமல் மீண்டும் தார் சாலை அமைப்பதற்கான வேலைகள் நடந்துவருகிறது என்றும், இந்நிலையில் கடந்த 01.09.2024 ஆம் தேதி காலை சுமார் 9.30 மணியளவில் நான் எனது உறவினர்களுடன் 1



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:34:17 +0530

விவசாய வேலைகள் எதிர்மனுதாரர்கள் 10 ஆம் செய்துகொண்டிருந்தபோது முதல் 9 எதிர்மனுதாரரின் உதவியுடன் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து தன்னையும் தனது உறவினர்களையும் அசிங்கமான கெட்ட வார்த்தைகளால் திட்டி, கையில் வைத்திருந்த கட்டை, இரும்பு ராடு, ஆகியவற்றால் சரமாரியாக தாக்கி தன்னுடைய தாவா சொத்தில் கட்டாயம் தார் சாலை அமைத்தே தீருவோம் என்றும் மிரட்டினர்கள் என்றும், மேற்படி முதல் 9 எதிர்மனுதாரர்களின் சட்டபுறம்பான செயளால் தனக்கும் தனது உறவினர்களுக்கும் பலத்த இரத்தகாயம் ஏற்பட்டது என்றும், மேற்படி சம்பவம் தொடர்பாக நான் அரூர் காவல்நிலையத்தில் புகார் மனு அளித்ததில் குற்ற எண்.422/2024 ஆக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் மனு சொத்தில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் 10, 12 ஆம் எதிர்மனுதாரர்களின் உதவியுடன் மீண்டும் அதிக ஆட்களுடன் வந்து மனு சொத்தை ஆக்கிரமிப்பு செய்யாமல் விடுவதில்லை என்றும், ஆக்கிரமிப்பு செய்து எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் 12 ஆம் எதிர்மனுதாரரின் பெயருக்கு ஆவணம் ஏற்படுத்த போவதாகவும், மனு சொத்தில் தார்சாலை அமைக்க போவதாகவும் மிரட்டினார்கள் என்றும், 1 முதல் 10 மற்றும் 12 ஆம் எதிர்மனுதாரர்கள் தனக்கு மட்டுமே பாத்தியப்பட்ட மனு சொத்தை மோசடியாக அடைய 11 ஆம் முயற்சி செய்துவருகிறார்கள் என்றும், 1 முதல் 10 மற்றும் 12 ஆம் எதிர்மனுதாரர்களின் இத்தகைய செயல் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானது, சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும் வாதிட்டார்.

**11.** இவ்வாறிருக்கையில் 1 முதல் 9ம் எதிர்மனுதாரர்கள்/1 முதல் 9ம் பிரதிவாதிகள் தரப்பில், கௌாப்பாறை - ஈட்டியம்பட்டி செல்லும் பிரதான தார்சாலையில் இருந்து கிழக்கு நோக்கி குரங்கனேரி வனச்சரகம் வரை புறம்போக்கு நிலங்கள் வழியாகவும், தாவா சொத்தின் வழியாகவும் காலம் காலமாக தொன்று தொட்டு தென்வடல் சுமார் 16 அடி அகலத்தில் சென்றுவரும் பாதையாகும் என்றும், மேற்படி பாதையின் வடபுறமும்,



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.09.02 17:34:22 +0530

தென்புறமும், சுமார் 100 குடும்பத்தார்கள் தங்களுடைய விவசாய நிலங்களுக்கும், குடியிருப்பு வீடுகளுக்கும் வண்டி, வாகனங்கள், கால்நடைகள், ஆட்கள், கனரக வாகனங்கள் போகவர பயன்படுத்தி வரும் வண்டிப்பாதையாகும் என்றும், மேற்படி பாதை வழியாக கௌாப்பாறை கிராம ஊர்பொதுமக்கள் குரங்கனேரி வனச்சரத்திற்கு கால்நடைகளை கொண்டு செல்லவும், கொண்டுவரவும், வனச்சரம் அருகில் கட்டப்பட்டுள்ள முனீஸ்வரன் ஆலையத்திற்கு ஊர்பொதுமக்கள் விழா காலங்களில் சென்று வழிபட்டு வரவும் தாவா சொத்தின் வழியாகவும், புறம்போக்கு நிலத்தின் வழியாகவும் சென்றுவரும் பாதையை தவிர வேறு பாதை ஏதும் கிடையாது என்றும், தாவா சொத்தின் வழியாகவும், புறம்போக்கு நிலங்கள் வழியாகவும் கிழமேலாக தென்வடல் 16 அடி அகலத்தில் செல்லும் பாதையை கௌாப்பாறை ஊராட்சிமன்றத்தின் உணவுக்கு வேலை திட்டத்தின் கீழ் 2004-2005-ம் ஆண்டில் மண்சாலையாக தரம் உயர்த்தப்பட்டது என்றும், அதன் பின்னிட்டு 2019-2020-ம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் பணி உத்தரவு நாள் 15-09-2020-ன்படிரூ.14,19,350/- மதிப்பீட்டில் ஜல்லி சாலையாக மேலும் தரம் உயர்த்தப்பட்டது, அதற்கான ஆவணத்தை எதிர்மனுதாரர்கள் தங்களது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி பணிகள் செய்தபோது வாதியின் முன் பாத்தியஸ்தர் முருகன் எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றும், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2024-2025-ம் ஆண்டு D.O.Lr.No.1650/2024/R2 நாள் 10-08-2024-தேதிய தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு படி மேற்படி பாதை மீண்டும் தார்சாலையாக ரூ.50,66,527.99 மதிப்பீட்டில் தரம் உயர்த்த ஆணை வழங்கப்பட்டு மேற்படி ஜல்லி சாலையை தார்சாலையாக மாற்ற 14-08-2024-ந் தேதி வேலை தொடங்கி பணி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது வாதியின் முன் பாத்தியஸ்தர் முருகன் த/பெ.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:34:25 +0530

லட்சுமணன் என்பவர் எவ்வித இடையூறும் எப்போதும் செய்யவில்லை என்றும், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2024-2025-ம் ஆண்டு D.O.Lr.No. 1650/2024/R2 நாள் 10-08-2024-தேதிய தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவிற்கு பின்னிட்டு தாவா சொத்தின் வழியாக பொதுமக்கள் சென்றுவருவதையும், சுமார் 100 குடும்பத்தார் விவசாய நிலங்களுக்கும், குடியிருப்பு வீடுகளுக்கும் காலம் காலமாக சென்றுவருவம் வண்டிப்பாதையை மறைத்து சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பான வகையில் வாதி 27-08-2024-ந் தேதி கிரையம் பெற்றுக்கொண்டு 10-ஆம் எதிர்மனுதாரர் தார்சாலை அமைக்க ஜல்லி கொட்டி நிரவல் செய்யப்பட்ட பிறகு மனுதாரர்/வாதி பொதுமக்களுக்கும், 100 விவசாய குடும்பத்தாருக்கும் வீண் இடையூறும், இடைஞ்சலும், தடைகளும் ஏற்படுத்தும் நோக்கில் 01-09-2024-ந் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் உள்ளூர் மற்றும் வெளியூர் சேர்ந்த அடியாட்கள் 50 பேர் கொண்ட கும்பல் ஆயுதங்களுடனும், (பைப்ராடு, மீன்வெட்டும் கத்தி,) மற்றும் தடி, தொன்னை ஆகியவைகளுடன் வந்து டிராக்டர் மூலம் மேற்படி வண்டிப்பாதையை அழித்து நாசம் செய்யவும், தார்சாலை அமைக்க நிரவப்பட்டிருந்த ஜல்லிகளை சேதப்படுத்தவும் முற்பட்டார்கள் என்றும்,

12. கௌளாப்பாறையை சேர்ந்த ராமன் த/பெ. பொன்னுசாமி என்பவர் 01-09-2024-ந் தேதி அதிகாலை இறந்த சங்கதி தெரிந்து 1 முதல் 9 எதிர்மனுதாரர்களும், ஊர்பொதுமக்களும் இறப்பிற்கு செல்வதற்காக மேற்படி பாதை வழியாக வந்துக்கொண்டிருந்தபோது மனுதாரர்/வாதி மேற்படி பாதை வழியாக யாரும் வரக்கூடாது என்றும், மேற்படி பாதை அவருக்கு சொந்தமானது என கூறி அடியாட்களுடன் சேர்ந்து 1 முதல் 9 எதிர்மனுதாரர்களையும், மற்றும் பெண்களையும் தகாத வார்த்தைகளால் திட்டி தாக்கியதில் 2-ம் எதிர்மனுதாரர் தங்கராஜ் என்பவரின் மண்டையை உடைத்தும், வலதுபுற



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.09.02 17:34:31 +0530

சோல்டரை உடைத்தும், வலது கை பெருவிரலை உடைத்து விட்டார்கள் என்றும், அதேபோல் ஏழுமலையை தாக்கியதில் அவரின் தலையில் பலத்த ரத்தகாயமும், 1-ம் பிரதிவாதி சிவாஜிக்கு தலையில் பலத்த ரத்தகாயமும், 6-ம் பிரதிவாதி குமுதாவிற்கு தலை மற்றும் உடம்பு பகுதியில் பலத்த ரத்த காயமும், 7-ம் பிரதிவாதி ஜப்பானின் முதுகின் பின்புறம் தடியால் தாக்கியதில் பலத்த உட்காயமும், வெளிகாயமும் ஏற்பட்டுவிட்டது என்றும், 5-ம் பிரதிவாதி சந்திரன் என்பவருக்கு தலையின் வலது அடித்ததில் வீக்க காயம் ஏற்பட்டுவிட்டது. 3-ம் பிரதிவாதி குமாருக்கு வலது கை மணிக்கட்டின் மீது தடியால் அடித்ததில் உட்காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், தாவா சொத்தின் வழியாகவும், அரசு புறம்போக்கு நிலங்கள் வழியாகவும் வண்டிப்பாதை கௌாப்பாறை - ஈட்டியம்பட்டி செல்லும் தார்சாலையில் இருந்து கிழக்கு நோக்கி குரங்கனேரி வனச்சரகம் வரை பஞ்சாயத்து வண்டிப்பாதை சென்றுவருவதை 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் புகைப்படம் எடுத்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், சி.டி, பெண்டிரைவ் ஆகியவைகளை நீதிமன்ற விசாரணையின் போது ஒப்படைக்க தயாராக உள்ளார்கள் என்றும், எனவே மனுதாரர் மனுவை இந்த 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

**13.** 11, 13 ம் எதிர்மனுதாரர்கள்/11,13 ம் பிரதிவாதிகள் தரப்பில், மனுதாரர் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு வாதிடப்பட்டுள்ளாது.

**14.** 12 ம் எதிர்மனுதாரர்/12 ம் பிரதிவாதி தரப்பில், அரூர் ஊராட்சி ஒன்றியம், எல்லப்புடையாம்பட்டி ஊராட்சி, கௌாப்பாறை கிராமத்தில் 2024-2025 ஆம் ஆண்டு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (MGSMT) கீழ் சாலை பணிகள் தொடங்கப்பட்டதாகவும், அதை எதிர்த்து மனுதாரர் மனு கொடுத்ததாகவும் அதனை உரிய முறையில் விசாரணை செய்து மேற்படி சாலை பணிகளை நிறுத்திவிட்டதாகவும் இந்த



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:34:36 +0530

எதிர்மனுதாரர் தெரிவிக்கின்றார் என்றும், மேற்படி சாலை பணிகள் சுமார் 6 மாத காலமாக முடிக்கப்படாததால் 04.03.2025-ம் தேதியில் ந.க.எண்.1358/2024/அ 2-ன் படி கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதன்பிறகு 24.03.2025-ம் தேதியில் ந.க.எண்.1650/2024/ஆர்2 ன் படி 13 ம் பிரதிவாதி மாற்றுப்பணிக்கான நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளதாகவும் இந்த எதிர்மனுதாரர் தெரிவிக்கின்றார் என்றும், மேற்படி மாற்றுப்பணியை அனுசரித்து 24.04.2025-ம் தேதியில் Roc.No. 1650/2024/R2 ன் படி பணி உத்தரவும் வழங்கப்பட்டு அரூர் ஊராட்சி ஒன்றியம், கொங்கவேம்பு ஊராட்சி, எஸ்.டி.சாலை முதல் கருத்தம்பட்டி வரை தார்சாலை மேம்பாடு செய்து பணி நிறைவு செய்யப்பட்டுவிட்டதாகவும் இந்த எதிர்மனுதாரர் தெரிவிக்கின்றார் என்றும், மேற்படி சங்கதிகள் அனைத்தையும் மறைத்து மனுதாரர் பொய்யான சங்கதிகளுடன் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இந்த எதிர்மனுதாரரின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

**15.** இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி கூறியுள்ள சங்கதிகள் குறித்து உரிய சாட்சி மற்றும் ஆவணங்களின் மூலமாக தான் அவர் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்க இயலும். மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் கொளம்பாறை - ஈட்டியம்பட்டி செல்லும் பிரதான சாலையில் இருந்து கிழக்கு நோக்கி குரங்கனேரி வனச்சரகம் வரை புறம்போக்கு நிலங்கள் வழிகாகவும், தாவா சொத்தின் வழியாகவும், தொன்றுதொட்டு தென்வடல் சுமார் 16 அடி அகலத்தில் சென்று வரும் பாதையில் 100 குடும்பங்களுக்கு மேலாக அதில் பயன்படுத்திக்கொண்டுள்ளார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும்போது



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:34:41 +0530

உரிய சாட்சி மற்றும் விசாரணையின் மூலமாக தான் மனுதாரர்/வாதி கூறியுள்ளபடி வழக்கு சொத்தை பொறுத்து உரிமை உள்ளதா? இல்லையா? என்பதை முடிவு செய்ய முடியும். தற்போதைய சூழ்நிலையில் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவது ஏற்புடையதாக இல்லை. ஆகவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக**, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:34:45 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**<u>இரு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்</u>** : -

-- இல்லை -

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.02 17:34:49 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.